


ஒலிப்பேழையில் பாடியவர்:

தேவார இசைக்கலைமணி

**சிவத்திரு சங்கரலிங்கம் வடிவேல் ஓதுவார்**

ஒலிப்பேழையில் முன்னுரை:

**சிவத்திரு கண்ணா கண்ணப்பன்**

செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

**(02-01-2013 க்கும் 01-01-2015 க்கும் இடையே பிறந்தவர்கள்– N/K1/K2)**
**(பங்கு பெறுவோர் மூன்று பாடல்களையும் பயின்று வரவேண்டும்)**

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

**ராகம் : இந்தளம்** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே.

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்**

**பண்: சாதாரி** **தாளம் : ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் தலை -
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

திருச்சிற்றம்பலம்

**திருமூலர் அருளிய திருமந்திரம்**

**ராகம்: ஆரபி** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R4, R5 & R6

**(02-01-2010 க்கும் 01-01-2013 க்கும் இடையே பிறந்தவர்கள்– P1/P2/P3)**
**(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)**

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

பண் : **நட்டபாடை** **தாளம் : ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர்அருளிய தேவாரம்**

**திருக்குறுந்தொகை** **தாளம் : ஆதி**

**ராகம்; மாயாமாளவகௌளை**

திருச்சிற்றம்பலம்

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர் அருளிய தேவாரம்**

**பண்: பழம்பஞ்சுரம்** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்றன் அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்டமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார் பரமன் னடியே பணிவாரே

திருச்சிற்றம்பலம்

**மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**ராகம்: மோகனம்** **தாளம் :ஆதி**

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R7, R8 & R9

**(02-01-2007 க்கும் 01-01-2010 க்கும் இடையே பிறந்தவர்கள் P4/P5/P6)**

**(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)**

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

**பண்: தக்கேசி** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பா வெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**பண் : காந்தாரம்** **தாளம் :ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர் அருளிய தேவாரம்

**பண் : நட்டராகம்** **தாளம் : ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள்பிரான் முதல்
காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள்பிரான் திரு
நீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறை
நான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள்பிரான் பழ
மண்ணிப் படிக்கரையே

திருச்சிற்றம்பலம்

## கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா

**ராகம்:ஆனந்த பைரவி** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R10 & R11

## (02-01-2003 க்கும் 01-01-2007 க்கும் இடையே பிறந்தவர்கள் Sec 1- 4)

## (பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : அந்தாளிக் குறிஞ்சி** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே .

திருச்சிற்றம்பலம்

### திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருக்குறுந்தொகை** **தாளம் : ஆதி**

**ராகம்: சாரங்கா**

திருச்சிற்றம்பலம்

கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே.

திருச்சிற்றம்பலம்

### சுந்தரர் அருளிய தேவாரம்

**பண் : பஞ்சமம்** **தாளம் : ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித் தான்மலை உத்தமனே

திருச்சிற்றம்பலம்

### மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**ராகம்: மோகனம்** **தாளம் :ஆதி**

திருச்சிற்றம்பலம்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்

கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்
திருச்சிற்றம்பலம்

**சேக்கிழார் அருளிய பெரியபுராணம்**

**ராகம்: மத்யமாவதி**

திருச்சிற்றம்பலம்

நன்மைபெருக் அருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R12,R13 & R14

## (02-01-2003 க்கு முன் பிறந்தவர்கள்)

**(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)**

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )

**திருச்சிற்றம்பலம்**

*வாயடைந்து பாடவல்லார் வானுலகு ஆள்பவரே*

**-திருமுறை 1-48-11**

*சிற்றம்பலம் மேய செல்வன் கழல் ஏத்தும்*
*செல்வம் செல்வமே*

**-திருமுறை 1-80-5**

*நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்*
*தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே*

**-திருமுறை 1-80-8**

# பதிகப் பாராயணம்

## 05.001 கோயில் (சிதம்பரம்)

"அருள்மிகு உமையபார்வதி உடனாகிய ஆதிமூலநாதர் அருள்மிகு சிவகாமி உடனாகிய நடராசர் திருத்தாள் போற்றி போற்றி"

திருக்குறுந்தொகை

இராகம்; மாயாமாளவகௌள்ளை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே. 01

அரும்பற்றப்பட ஆய் மலர் கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம் பிரானையே. 02

அரிச்சுற்ற வினையால் அடர்ப் புண்டுநீர்
எரிச்சுற்றக் கிடந்தார் என்று அயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனம்
திருச் சிற்றம்பலம் சென்றடைந்து உய்ம்மினே. 03

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே. 04

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி இருப்பனென் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே. 05

சிட்டர் வானவர் சென்று வரங்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்அச்
சிட்டர் பால் அணுகான் செறு காலனே. 06

ஒருத்தனார் உலகங்கட்கு ஒருசுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடமுண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே. 07

விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்து
உள் நிறைந்து நின்றாடும் ஒருவனே. 08

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந்திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே. 09

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடி பாதமென் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந்து உய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்